## பூநகரிப் பிரதேச சபை

## கிளிநொச்சி மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 12 ஏப்ரல் 2019 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 29 மே 2019 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 25 ஒக்டோபர் 2019 திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பூநகரிப் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய நிதிக்கூற்றானது 23 மார்ச் 2019 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டதுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகள் / சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய செயலாற்றல் அறிக்கைகள் நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பித்தல் என்ற விடயம் எதிர்வரும் வருடத்தில் தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்படும். |

**(ஆ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | சபையின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் அவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் இனி வரும் ஆண்டில் வெளிப்படுத்தப்படும் |

**(இ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | இறைச்சிக்கடை குத்தகை நிலுவை வருமானம் ரூபா 52,589 கணக்குகளிற்கு கொண்டு வரப் பட்டிருக்கவில்லை இதனால் வருமானம் ரூபா 52,589 ஆன தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு இறுதிக் கணக்கறிக்கையுடன் இவ் விடயம் கவனத்தில் எடுக்கப்பட்டு சீர்செய்யப்படும். |
| (ii) | சில்லறைக் கடன் கொடுத்தோர் கணக்கில் உள்ள 02 வேலைத்திட்டங்களின் ரூபா 800,000 கொடுப்பனவுகள் 31 மார்ச் 2019 வரை வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வேலைத்திட்டங்கள் ஒப்பந்த காலத்திற்குள் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இனி வரும் காலங்களில் குறித்த ஆண்டிலேயே வேலைத்திட்டங்கள் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 891(1) | பிணைப்பணப் பதிவேடானது பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | பிணைப்பண பதிவேடு பேண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட 46 காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 944,090 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 11 வைப்புக்கள் மீளளிக்கப்பட்டுள்ளது. ஏனையவை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | (iii) நிதிப்பிரமாணம் 138 | செலவினத்தை சான்றுறுதிப்படுத்தும் | நிதிப்பிரமாணத்தி ற்கமைய | தற்போது சான்றுப்படுத்தும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தரின் கையொப்பமின்றி ரூபா 39,484 பெறுமதியான 08 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | செயற்பட வேண்டும். | உத்தியோகத்தர் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. |
| (iv) | நிதிப்பிரமாணம் 371 இன் திருத்திய சுற்றறிக்கை 2015 யூலை 14 திகதிய 03/2015 இன் 371(2)ஆ | உபகட்டுநிதியாக ரூபா 100,000 வரை வழங்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 110,445 வழங்கப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும். | வாகனத்திற்கான காப்புறுதி செய்வதற்கு ரூபா 110,445 முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. இம் முற்பணம் சீர் செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | மாகாண நிதி ஒழுங்குவிதி இல 163.3 | வழங்கப்பட்ட ரூபா 1,332,276 முற்பணங்கள் 31 திசெம்பர் 2018 வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மாகாண நிதி ஒழுங்குவிதிக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இனி வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாது இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளர், வடமாகாணம் அவர்களின் 2016 மே 25 திகதிய 04/2016 சுற்றறிக்கை | அரசிறை அறவீடு, நிலுவை அறவீடு பற்றிய மாதாந்தக் கூற்று – பி.ச 07 கணக்கறிக்கை மாதாந்தம் தயாரிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபையினால் பி.ச-07 தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | உரிய சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பி.ச - 07 2018 ஆம் ஆண்டு தயாரிக்கப்படவில்லை. இனி வரும் காலங்களில் இத் தவறுகள் ஏற்படாது இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,621,348 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,809,086 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல்வேறு தேவைகளுக்கென ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 15 முற்பணங்களின் கூட்டு மொத்தம் ரூபா 2,358,422 தொகையானது 2 தொடக்கம் 64 மாதங்கள் வரை காலதாமதமாகவே தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | முற்பணங்கள் உரிய காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து நிலையான வைப்பு வட்டி வீதத்திற்கு அமைய தண்டம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றின் படியான நிலுவைகள் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றின் படியான நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 212,550 | - | 197,570 | 3,850 | 27,000 | - | 38,400 | - |
| (ii) | வாடகைகள் | 2,531,460 | - | 2,591,008 | 951,617 | 3,915,045 | - | 2,530,644 | 723,580 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 409,120 | - | 701,286 | - | 690,450 | - | 800,952 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 7,075,140 | - | 8,988,534 | 7,087,696 | 6,626,000 | - | 7,625,735 | 5,000,357 |
| | | 10,228,270 | | 12,478,398 | 8,043,163 | 11,258,495 | | 10,995,731 | 5,723,937 |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 951,617 ஆன வாடகைகள் மற்றும் குத்தகைகள் 01 தொடக்கம் 07 ஆண்டுகளாக அறவிடப்பட்டிராமல் வருமான நிலுவையாக காட்டப்பட்டுள்ளன. | வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு இணக்க சபையின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபையானது தனது வருமானத்தினை பட்டியல்படுத்தி சேகரிப்பதற்கு கடந்த 10 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருமானங்களை பட்டியல்படுத்தி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்வரும் காலத்தில் வருமானங்களை பட்டியல்படுத்தி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **(அ) நீதிமன்ற தண்டப்பணம்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,553,917 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பணங்களை உரிய காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணங்களுக்கான கோரிக்கைக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதும் அவற்றிற்கான கட்டணங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. |
| **(ஆ) முத்திரைக் கட்டணங்கள்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,491,705 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | முத்திரைக்கட்டணங்களை உரிய காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முத்திரைத்தீர்வைகளுக்கான கோரிக்கைக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதும் அவற்றிற்கான கட்டணங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுசேவைகள் மற்றும் பொதுவழிகள் மற்றும் மக்களின் சுகாதார, வசதி மற்றும் நலன்புரி ஆகியன சபையினால் நிறைவேற்றப்படவேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்து அதன் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது/2018/61 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சபையினால் குறித்த இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு நடைபெறுகின்றன. |

3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை 72 ஆகவும் உள்ளவாறான ஆளணியினர் எண்ணிக்கை 41 ஆகவும் இருந்ததுடன் 31 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சிரேஷ்ட தரம் மற்றும் இரண்டாம் தரங்களுக்கு 04 ஆளணியினர் நிரப்பப்பட்டுள்ளது. இவற்றில் இரண்டாம் தரத்திற்கு நிரப்பப்பட்ட 1 ஆளணியினர் எமது நிலையத்திற்கு விடுவிக்கப்படவில்லை. ஏனைய தரத்தினருக்குரிய வெற்றிடங்கள் இவ் ஆண்டிற்குள் தீர்வு செய்யப்படும் |

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2018 இல் நிலையான சொத்துக்களின் கூட்டுமொத்தம் ரூபா 136,570,183 ஆகக் காணப்படுகின்ற போதிலும் சபையினால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப்பதிவேடு பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பேண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 11 வாகனங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. இவற்றை பயன்படுத்தக்கூடியவாறு திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | பயன்படுத்த முடியாத வாகனங்களை பயன்படுத்த கூடியவாறு மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | திருத்தம் செய்வதற்கு போதிய ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால் இயங்காமல் உள்ளது. இனி வரும் ஆண்டில் திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். பவுசர்கள் மற்றும் ரெயிலர்கள் ஏல விற்பனை செய்வதற்கு அனுமதிக்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

**(இ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டுக்கென சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த 38 வாகனங்கள் நாளது வரை சபைக்கு உடமையாக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சபையில் உள்ள 38 வாகனங்களில் 10 வாகனங்கள் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளன. 1 வாகனம் குத்தகை அடிப்படையில் உள்ளது. 11 வாகனங்களுக்கு எதுவிதமான பதிவுகளும் இல்லை. 6 வாகனங்களுக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் மோட்டார் கிரேடர் மற்றும் உருளையினைப் பயன்படுத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் வருமானங்களை ஈட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களைப் பயன்படுத்தி வருமானங்களை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மோட்டார் கிரேடரைப் பயன்படுத்துவதற்கு சாரதி பற்றாக்குறை உள்ளது. உருளை தற்போது பழுதடைந்துள்ளது திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.4 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பூநகரிப் பொது நூலகத்தில் 168 புத்தகங்கள் குறைவாகக் காணப்பட்டுள்ளதாக கணிப்பீட்டு சபை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறைவான புத்தகங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இதுவரை 29 புத்தகங்கள் வாசகர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. |

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கு முன்னைய ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விஜி வீதி புனரமைப்பு, பல்லவராயன்கட்டு சோலை பாடசாலை வீதி புனரமைப்பு மற்றும் டோன்பொஸ்கோ வீதி புனரமைப்பு வேலைத்திட்டங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட காலத்தினை விட 6 மாதங்கள் தாமதமாகப் பூர்த்தி செய்யப்பட்டமையால் முறையே ரூபா 92,900, ரூபா 45,000, ரூபா 78,015 தாமத கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாமதகட்டணங்கள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ICTAD நிறுவனத்தில் ஒப்பந்தப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரினால் வேலை நிறைவேற்றப்படுமாயின் திரவச்சேதம் அறவிடும் விதிமுறை உள்ளது. எதிர்வரும் காலத்தில் சபைத்தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பந்த நிபந்தனைகளில் திரவச்சேதம் பற்றிய சரத்துகள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீட்டில் ரூபா 274,000 பயிற்சி நெறிக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாமல் வாக்குப்பண மாற்றத்தின் ஊடாக வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. | ஒதுக்கப்பட்ட நோக்கத்திற்கே நிதி பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமானம் குறைந்த சபை ஆகையால் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் இருந்த நிதியினை வேறு நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. |